தீப்பொறி உருவாகும் பணி (Hot Work)

எப்போது முடிக்க வேண்டும் - எந்தவொரு தீப்பொறி உருவாகும் பணி நடவடிக்கைகளும் தொடங்குவதற்கு முன்

தொடங்குவதற்கு முன் கீழே உள்ள ஒவ்வொரு கட்டுப்பாடும் / பாதுகாப்பையும் உறுதிப்படுத்தவும் வேலை	ஒவ்வொரு கட்டுப்பாடு / பாதுகாப்பையும் உறுதிப்படுத்துவதற்கான வழிகாட்டுதல்	பணியைச் செய்யும் நபர்(கள்)	வேலை தொடக்க சரிபார்ப்பாளர்
நான் உறுதிப்படுத்தியுள்ளேன்:			
1 **தீப்பொறி உருவாகும் பணி செய்வதற்கு சக்தி தனிமைப்படுத்தல் (Energy Isolation) தேவையா என மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது. இந்த தீப்பொறி உருவாகும் பணிக்கு சக்தி தனிமைப்படுத்தல் தேவையா?** ☐ ஆம் ☐ இல்லை **ஆம் என்றால்: சக்தி தனிமைப்படுத்தல் (Energy Isolation) வேலை தொடக்க சரிபார்ப்புப் பட்டியலை (Start Work Check) பூர்த்தி செய்யவும்.** **இல்லை என்றால்: அடுத்த 2 கட்டத்திற்குச் செல்லவும்.**	• அபாயம் ஏற்படுத்தக்கூடிய அனைத்து சக்தி மூலங்களும் கண்டறியப்பட்டு, தனிமைப்படுத்தப்பட்டு, திட்டத்தின்படி பூட்டு (Lock) மற்றும் குறிச்சொல் (Tag) பொருத்தப்பட்டுள்ளன. • வெடிக்கும் பொருட்கள் அல்லது வாயுக்களை அகற்ற, அமைப்பு (System) காலி செய்யப்பட்டு, சுத்தம் செய்யப்பட்டு அல்லது வாயு நீக்கம் (Purge) செய்யப்பட்டுள்ளன.		
தீப்பொறி உருவாகும் பணி நடவடிக்கைகளுக்கு முன்			
நான் உறுதிப்படுத்தியுள்ளேன்:			
2 **ஆபத்துகள் கண்டறியப்பட்டு, தேவையான கட்டுப்பாட்டு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. வேலை தொடங்குவதற்கு பாதுகாப்பான நிலையில் உள்ளது.**	• செய்யப்படும் வேலைக்கு ஏற்ப ஆபத்து மதிப்பீடு (Risk Assessment) செய்யப்பட்டுள்ளது. • வேலை தொடங்குவதற்கு முன், பணிக்குழுவுடன் ஆபத்துகள் குறித்து விவாதிக்கப்பட்டுள்ளது. • கூடுதல் ஆபத்துகளை ஏற்படுத்தக்கூடிய ஒரே நேர பணிகள் (Simultaneous Operations) உள்ளனவா என சரிபார்க்கப்பட்டுள்ளது.		
3 **தீப்பொறி உருவாகும் பணி (Hot Work), அபாயகரமான பகுதியில் நடைபெறுகிறதா?** ☐ ஆம் ☐ இல்லை **ஆம் என்றால்: ஆரம்ப வாயு பரிசோதனை (Initial Gas Test) முடிக்கப்பட்டுள்ளதா என்பதை உறுதிப்படுத்தவும்.** **இல்லை என்றால்: அடுத்த கட்டத்திற்குச் செல்லவும்.**	• ஆரம்ப வாயு பரிசோதனை (Initial Gas Test), தகுதி பெற்ற வாயு பரிசோதகரால் (Qualified Gas Tester) மேற்கொள்ளப்பட்டுள்ளது: - தீப்பொறி உருவாகும் பணி நடைபெறும் இடத்தின் மேல்புறம் மற்றும் கீழ்புற திறப்புகளில். - பணிப்பகுதியைச் சுற்றிய தேவையான தூரத்திலும். • வாயு பரிசோதனை முடிவுகள் அனுமதிக்கப்பட்ட பாதுகாப்பு வரம்பிற்குள் உள்ளன. குறிப்பு: • தேவைப்பட்டால், அபாயகரமான பகுதிக்கு வெளியேயும் வாயு பரிசோதனை செய்யப்பட்டுள்ளது என்பதை உறுதிப்படுத்தவும். • வாயு பரிசோதனை, நிறுவன விதிமுறைகள் மற்றும் பொருந்தும் பாதுகாப்பு நடைமுறைகளின்படி மேற்கொள்ளப்பட வேண்டும்.		

4	**தீப்பொறி உருவாகும் பணி நடைபெறும் இடத்தின் காற்று நிலை தொடர்ந்து கண்காணிக்கப்படுகிறது.**	• வேலை தொடங்குவதற்கு முன், அடுத்தடுத்த வாயு பரிசோதனைகள் எவ்வளவு அடிக்கடி செய்ய வேண்டும் என்பது பதிவு செய்யப்பட்டுள்ளன (எ.கா., வேலை அனுமதிப் பத்திரத்தில்). குறிப்பு: • "தொடர்ந்து கண்காணித்தல்" என்பது, குறிப்பிட்ட இடைவெளியில் வாயு பரிசோதனை செய்வது அல்லது வேலை நடைபெறும் முழு நேரமும் காற்று நிலையை தொடர்ந்து கண்காணிப்பது ஆகும்.		
5	**தீப்பொறி உருவாகும் பணியால் தீப்பற்றும் வாய்ப்புள்ள மூலங்கள் கண்டறியப்பட்டு, தேவையான கட்டுப்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.**	• தீப்பொறி உருவாகும் பணி நடைபெறும் பகுதியில் தீப்பற்றுவதைத் தடுக்க தேவையான தடுப்புகள் (Barriers) அமைக்கப்பட்டுள்ளன: - வடிகால் (Drain), இடைவெளிகள் (Gaps), தொட்டி (Tank) அல்லது குழாய்களில் (Piping) உள்ள திறப்புகள் மூடப்பட்டுள்ளன அல்லது சீல் செய்யப்பட்டுள்ளன. - காற்று வெளியேற்றும் இடங்கள் (Vents) தனிமைப்படுத்தப்பட்டுள்ளன அல்லது பணிப்பகுதியிலிருந்து விலக்கி மாற்றப்பட்டுள்ளன. • பயிற்சி பெற்ற தீ கண்காணிப்பாளர் (Fire Watch) நியமிக்கப்பட்டு, பணியிடத்தில் உள்ளார். • தீயணைப்பு உபகரணங்கள் (Firefighting Equipment) பரிசோதிக்கப்பட்டு, பணியிடத்தில் தயார் நிலையில் மற்றும் முழுமையாக செயல்படும் நிலையில் உள்ளன.		
6	**எளிதில் தீப்பற்றக்கூடிய பொருட்கள் (Flammable/Combustible Materials) அகற்றப்பட்டுள்ளன அல்லது தனிமைப்படுத்தப்பட்டுள்ளன.**	• எளிதில் தீப்பற்றக்கூடிய அனைத்து பொருட்களும் அகற்றப்பட்டுள்ளன. அகற்ற முடியாத நிலையில் இருந்தால், தீப்பொறி படாதபடி தீத் தடுப்பு போர்வை (Fire Blanket) போன்ற பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. இந்த பாதுகாப்பு ஏற்பாடுகள் அனைத்தும் செய்யப்பட்டு, சரியாக செயல்பாட்டில் உள்ளனவா என்பதை உறுதிப்படுத்தவும்.		

இந்த கட்டுப்பாடுகள் / பாதுகாப்புகள் நடைமுறையில் உள்ளனவா மற்றும் வேலையைத் தொடங்குவதற்கு முன்பு சரிபார்க்கப்பட்டுள்ளன என்பதை உறுதிப்படுத்தவும். ஏதாவது மாற்றம் ஏற்பட்டால் நிறுத்தி உதவியை நாடுங்கள்.

	அச்சிடப்பட்ட பெயர் மற்றும் பொறுப்பு	கையொப்பம்	தேதி
வேலை தொடக்க சரிபார்ப்பாளர்			

தீப்பொறி உருவாகும் பணி (Hot Work)

